மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

அரசு ஊழியர்களுக்கு பேருந்துகளில் இலவசச் சீட்டுகள்.

*553 வினா—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

அரசு பேருந்து வண்டிகளில் செல்லுவதற்காகச் சென்னை நகரில் சர்க்கார் ஊழியர்களுக்கு இலவசச் சீட்டு **(free pass)** வழங்குவதற்கு சர்க்காரிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : சர்க்கார் ஊழியர்களுக்கு இப்படி இலவசச் சீட்டு கொடுப்பதில் சர்க்காருக்கு எவ்வளவு நஷ்டமாகும் ? இதை மீண்டும் பரிசீலனை செய்து இலவசப் பாஸ் கொடுப்பதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்த இலவசப் பாஸ்கள் கொடுப்பதில் எவ்வளவு நஷ்டம் என்ற பிரச்சினை எழவில்லை. **1967**-ல் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகிற ஊழியர்கள் ஒரு மனு கொடுத்தார்கள். அதில் இலவச பாஸ், அல்லது அதற்குப் பதிலாக போக்குவரத்து படி ரூ. **10** என்று கேட்டிருந்தார்கள். ஆனல் அதற்குப் பிறகு இங்கு செயலகத்தில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு மத்திய அரசு கொடுக்கிறபடி, நகரப்படி, அகவிலைப்படி இவை கொடுத்து விட்டபடியால் இலவச பாஸ் கொடுக்கிற பிரச்சினை மீண்டும் எழவில்லை.

கோயில்களிலிருந்து சிலைகள் களவு.

*547 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) **1966–67**-ம் ஆண்டில் கோயில்களிலிருந்து களவுபோன சிலைகள் எத்தனை ?

(இ) அதன் காரணமாக வழக்குகள் தொடரப்பெற்றனவா ?

(உ) ஆம் எனில், எத்தனை வழக்குகள் வெற்றி பெற்றன, எத்தனை வழக்குகள் தோல்வியுற்றன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) **77**.

(இ) ஆம். **12** வழக்குகள் தொடரப்பட்டன.

(உ) **11** வழக்குகள் வெற்றிபெற்றன. **1** முடிவு பெறவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : திருட்டுப்போன சிலைகள் எந்தக் கடவுள் களுக்குச்சொந்தமானவை ? இனிமேல் இந்தக் கடவுள்களைக் காப்பாற்று வதற்காக தனியாக ஒரு போலீஸ் படையை அமைக்க அரசுக்கு ஏதாவது உத்தேசமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: நாற்பது கோவில்களில் சிலைகள் திருடு போயிருக்கின்றன. அவை மாவட்டவாரியாக இருக்கின்றனவே தவிர, எந்தெந்த சாமிகள் என்பது பற்றி தகவல் இல்லை. இது சம்பந்த மாக தனியாக ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ் போட்டு புலன் விசாரணை செய்து வருகிருர்கள்.

திரு. தி. பொன்னுமலை : அடிக்கடி சாமி கோவில்களில் சாமி விக்கிரகங்கள், சாமியின் நகைகள் இவை பல்வேருக திருடு போய்க் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கோவிலினும் பல வகைப்பட்ட சாமிகள் இருக்கின்றன. சாமிகளுக்குள்ளேயே சாமிகள் திருட்டுப்